RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1944

OPEN ACCESS

# முதற்காப்பியம் காட்டும் அறம் தமிழர்களின் மறம்

**அ. சதீஷ்குமார்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-625009, தமிழ்நாடு, இந்தியா

# Bravery as the Virtue of Tamil People as shown in the First Epic

**A. Sathishkumar** [a, *]

[a] Department of Tamil, Thiagarajar College Madurai-625009, Tamil Nadu, India

* Corresponding Author: tamilabi555@gmail.com

Received: 02-08-2022
Revised: 30-09-2022
Accepted: 13-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

One of the most important human activities is being virtuous. The Tamils, in particular, were seen as the best in the humanistic character of morality. This quality was ingrained in the blood of the Tamil people from the king to the poor. To add to this view, the literature from the Sangam literary period to the present time has been recorded. It can be seen that these exclusions contain four certainties: virtue, wealth, happiness, and home. In them, the Tamils have preserved charity as the object of life of the Tamils, as a bulwark of morality, and as a tool for loving living beings. He who is kind in his mind even when there is not much wealth, and who gives as much as possible without changing his face, is the foremost virtue. Society will prosper only because of the humanists who have a heart that is inferior to the poorer than themselves and to the poor who stand by them. Since then, till today, it is easy to do harm to other beings and it is difficult to do good to others. The individual needs courage when he wants to benefit these creatures. Kovalan is such a leader. He is a person who donates the gold and material he has in order to wipe away the suffering of others and is a humanitarian who follows virtue and life. Virtue is acting for the common good without selfishness. The best thing is to help someone without considering the benefit of what kind of help will be returned back. The message, which can be said to be the pinnacle of Silappathikaram, is that Kannagi did not care when her husband parted ways and returned after losing her gold and wealth. It is said to be the pinnacle of Silapathikaram because the purpose of being born as a human being is to do good deeds to save other beings from suffering. It can be seen that this epic says that he regrets not doing those things in his lifetime. It can be seen from this that the Tamils lived their lives with the fear of virtue and valour.

**Keywords:** First Epic, Humanistic Character, Sangam Literary

## முன்னுரை

உயிர்களிடத்து அன்பு கொண்டு தன்னை போன்று பிறரையும் நேசித்த பண்டையத்தமிழ் சமூகம். இல்லற வாழ்வை தொடங்கியதிலிருந்து, அறத்தை வாழ்வின் ஒரு அங்கமாக வைத்து போற்றியுள்ளனர். இவருக்கு இன்ன உதவி செய்தால் இன்ன பலன் கிடைக்கும் என்ற பயனை நோக்காமல் செய்யும் உதவியே மனிதநேயச் செயல்களாகும். இதனை ஒத்த கோவலன் தன்னிலைக் கருதாமல் பிற உயிர் துன்பம் துடைக்கும் பொருட்டு பத்தினி ஒருத்தியின் மணாளனைக் கண்டு பொய் உரைத்தானை சதுக்கப்பூதம் உன்ன முற்படும்போது, அவனுக்குப் பதிலாகத் தன்னை உண்ணும் படி வேண்டி நிற்கையில். அவன் வீரமிக்க ஆண் மகனாக திகழ்கிறான். கோவலன் துன்பமுற்று இருக்கும்

அவலைப் பெண்ணின் துன்பம் துடைக்கும் பொருட்டு, காடேறிச் சென்று அவளின் கணவனை அறிந்து அவளோடு சேர்த்து வைத்ததோடு இல்லாமல், அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையானப் பொன்னும் பொருளும் கொடுத்து உதவுகிறான். இவை மனித நேயத்திற்கு அப்பாற்பட்டுச் செய்யக்கூடிய ஒரு செயலாகப் பார்க்கப்படுகிறது. முதியவரை களிறு ஒன்று பற்றிக்கொள்ளவே, அதனை கண்ட கோவலன் தன்னுயிரை துச்சமென கருதாமல் சென்றுக் களிற்றை அடக்குகிறான் இங்ஙனம் கோவலன் முதியவர் தானே என்று அலட்சியம் கொள்ளாமல் உயிரைக் கப்பாற்றுகிறான். களிற்றின் முன்னே துணிச்சலுடன் சென்ற கோவலனின் வீரம் போற்றுதலுக்குரியனவே. இவ்வாறாகத் தமிழர்கள் அறம் செய்வதையே மறமாக நினைத்து வாழ்ந்ததனை அறியலாம்.

## அறம் தமிழர்களின் மறம்

சங்கத் தமிழர் பெரிதும் போற்றியச் செயல் அறம் ஆகும். மற்ற உயிர்களையும் தம்முயிர் போல ஒப்பக்கருதி, ஒப்பும் மனித நேயத்திற்கு அடிப்படையானது அறச்செயல்களாகும். தம்முன் கூடிப் பழகும் சுற்றத்தினரை அன்போடு பாதுகாப்பதும் வறுமையுற்ற காலத்தில் எள்ளி நகையாடாமல் இருப்பதும், வாழ்க்கையானது நிலையற்ற தன்மையுடையது என்பதை அறித்து, வறுமையில் தவிக்கும் குடும்பங்கள், உறவினர், உறவினரல்லாத ஆன்றோர், சான்றோர் ஆகியோரைப் பாதுகாக்கும் அறமே சிறந்த மனிதநேயச் சிந்தனையாக நிற்கிறது இதனை

"அற்ற குளத்தின அறுநீர்ப் பறவைப்போல

உற்றுழித் தீர்வார் உறவு அல்லார் அக்குளத்தில்"

அதவாது தண்ணீர் வற்றிய குளத்தைவிட்டு வேறிடம் சென்று விடுகின்ற நீர்ப் பறவைப்போல் இன்பம் வற்றித் துன்பம் சூழ்ந்த பொழுது உறவினை விட்டு வெளியேறுவர் (Kathir Murugu, 2007). சிறந்த உறவினர் ஆக முடியாது. ஆனால் அக்குளத்தில் நீர் வற்றிய போதும் குளத்தை விட்டு நீங்காத ஆம்பல், நெய்தல் கொடிகள் போன்று நல்லோராகிய உறவினர்களிடம் அறத்தோடு கூடிய மனிதநேயம் இருக்கும். இப்படிப்பட்ட சிறந்ததோரை போற்றுதல் வேண்டும்.

அறம் என்னும் மனிதநேயப் பண்பற்றோரை ஔவையார் பாவிகள் என்று கூறுவதை நல்வழிப் பாடலுடன் நோக்கத்தக்கது

"பாடுபட்டு தேடிப்பணத்தைப் புதைத்து வைத்துக்

கேடு கேட்ட மானிடரே கோதங்கள், கூடுவிட்டு

இலக ஆவிதான் போயின பின்பு, யாரோ

அனுபவிப்பார் பாவிகாள் அந்தப்பணம்"

இதில் சிலர் தாம் உழைத்துத் தேடிய பணத்தை திருடர் உறவினர் முதலானவர்களிடமிருந்து காக்க விரும்பி, பூமியினுள் இட்டு வைப்பர். உன் பொன்னையும் பொருளையும் புதைத்து வைக்கும் நிலையில் உங்கள் உடலில் இருந்து உயிர் பிரிந்து போய் விட்டால் அதனை யார் அனுபவிப்பார்களோ எனவே இருக்கும் போதே நன்கு கொடுத்து அனுபவியுங்கள் என்று உரைக்கிறது (Kathir Murugu, 2007).

பொருள் இருப்போர்க்கு அழகு, அதனை கொடுத்து உதவுவதே என்கிறது கொன்றை வேந்தன்- செல்வர்க்கு அழகு செழுங்கிணதாங்குதல்" என்ற அடிகளின் வயிலாக அறியலாம் (Kathir Murugu, 2007). அதுபோல மனித நேயமுடைய சான்றோர்கள் துன்புறுவர்களை இனம் கண்டு, தாமாகவே முன்சென்று உதவும் பண்புடையவராய் இருப்பர் இக்கருத்தினை

"என்று முகமன் இயம்பாதவர் கண்ணுஞ்

சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர் துன்றுசுவை

புவிற் பொலிகுழலாய் புங்கை புகழவோ

நாவிற் குதவும் நயந்து”

மேலும் கையானது தன்னை புகழ்ந்து பேசும் என்று நினைத்து நாவிற்கு உணவு கொடுப்பது கிடையாது என்று உரைக்கிறார் - சிவப்பிரகாசர். இதனையே நீதி வெண்பா கடமை எனக் கூறுகிறது (Kathir Murugu, 2007).

“உள்ள பொழுதுதேது முவந்தளிப்பு தல்லாதோர்

எவ்வளவு மீய விசையுமோ தெள்ளு தமிழச்”

கடல் நீர் மேகத்துக்கு கொடுப்பது போல தன்னிடம் பொருள் இருக்கும் காலத்தில் பொருள் கொடுத்தும் உதவ வேண்டும் என்கிறது (Kathir Murugu, 2007).

## இல்லோர் செம்மல்

பத்தினி ஒருத்தியின் புகழைக்கெடுக்க அவளின் மணாளனைக் கண்டு பொய்பல கூறுகிறான் ஒருவன். பிறர் வாழ்வை கெடுக்க எண்ணி பொய் உரைத்தவனை பூதமொன்று தன் வயப்படுத்தியது. அக்கயவனின் தாய் அதுகண்டு வருந்திய போது பூதத்திடம்” என்னுயிரை எடுத்துக்கொள் அவனுயிரை விட்டுவிடு” என வேண்டுகின்றவன் கோவலன்.

“நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு

பரகதி இழக்கும் பண்பீங்கு இல்லை”

எனக்கூறிய பூதம் அத்தீயோனைக் கொன்றது. தவித்து நின்ற தாய்க்கும் பிறர்க்கும் துணையாய் நின்று, தன் சுற்றத்தரைப் போல பேணியவன் கோவலன். அவனைப் “பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்” எனப் புகழுவலன் மாடலமறையோன் இந்நிகழ்வால் தன்னுயிர் ஈந்து பிறவுயிரைக் காக்க முனைந்த கோவலானின் மானுட நேயம் புலனாகிறது. அத்தோடு இறந்தானின் உறவைத்தம் உறவாய்க் கருதிப் பல்லாண்டு பாதுகாத்தமை அவனின் மனித நேயம் அறத்தின் உச்சமாகும் (Manickavasagam, 2019).

## செல்லாச் செல்வன்

கோவலனின் மனித நேய அறத்தைச் சுட்டும் பிறிதொரு நிகழ்வு மாடலனால் சுட்டப்பெறுகிறது. தன் பிள்ளையைக் காத்த கீரியை தன் மனைவி அடித்துக் கொன்று விடுகிறாள். இச்செய்தியைக் கேட்ட அவள் கணவன் ஒரு மறையோன் அவளுடன் வாழ விரும்பாமல் வடதிசை நோக்கி செல்ல விரும்புகிறான். பிறகு வடதிசைக்கும் பயணமாக இருந்த அவனை வேண்டுகிறாள் மனைவி. அவளுடன் வாழ மறுத்த அவன் வடமொழிச் சொற்கள் நிறைந்த ஏடொன்றை அவளிடம் தந்து, வடதிசைக்குப் பயணிக்கிறான். அல்லலுற்று ஆற்றாமல் அலைந்தாள் அப்பெண். அவளைக் கண்ட கோவலன் அவள் படும் தொல்லை கண்டு வருந்துகிறான். கொலைத் தொழில் புரிந்தவரின் பாவம் தொலைய அறநூலின் வழிப்படி தானம் புரிந்து அவளின் துன்பம் தீர்க்கிறான் கோவலன். ஓர் அவலைப் பெண்ணுக்காகத் தன் பொருளைச் செலவிட்டது செல்வச் செருக்காலில்லை என்பதை அவனது அடுத்த கட்ட செயல் மெய்ப்பிக்கின்றது. காடேறி அவள் கணவனைப்பார்த்து பல சொல்லித் திரும்பிவரச் செய்து கணவன்-மனைவி இருவரையும் சேர்த்து வைத்து அவர்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய அனைத்துச் செல்வங்களையும் தருகின்றான் கோவலன். எனவே தான தருமம் என்ற நெறிப்பாட்டிற்கப்பால் தான் கொண்ட அறத்தை வெளிப்பாடாக இவ்வாறான செய்கைகளில் தன்னை அடையாளங்காட்டுகிறான் கோவலன். கோவலனின் இப்பண்பை

“கானம் போன கணவனைக்கூட்டி

ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து

நல்வழிப்படுத்த செல்லாச்செல்வ”

என்கிறது சிலப்பதிகாரம் (Manickavasagam, 2019).

## கருணை மறவன்

கோவலனின் அறச் செயலுக்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும் மாதவியுடன் வாழ்ந்ததன் பயனாகப் பெண் மகளைப் பெற்றவனாகிய கோவலன் அம்மகவுக்கு மணிமேகலை எனப்பெயரிட்ட நாளில் வந்திருந்தோர்க்கு பொன்வழங்கி சிறப்பிக்கின்றான் கோவலன். இது தன் மகிழ்ச்சியை மட்டுமின்றி மற்றவர்களைச் சிறப்பிக்கும் மனநலனையும் சுட்டும் அச்சூழலில் தானங்கேட்டு தளர்நடையிட்டு தண்டுன்றி வந்தான் ஒரு முதியவன், எதிர்பாரா விதமாக அக்கிழவனை மதம் கொண்ட யானை ஒன்று பற்றி நின்றது. யானையிடமிருந்து அம்முதியவரை மீட்கத் தன்னுயிரைப் பற்றி கவலையுறாமல் போராடி அக்கிழவனை மீட்டவன் கோவலன்.

அத்துடன் மாத்திரம் நின்றிருந்தால் கோவலனின் பிறவுயிரைத்தன் உயிராகக் கருதம் ஒரு நற்பண்பு மாத்திரமே புலப்பட்டிருக்கும். அந்த யானையினால் வேறு எவ்வுயிருக்கும் தீங்கு நேருதல் கூடாது என்று கருதிய கோவலன், கரிய பெரிய அந்த யானைமீது ஏறி பிடரியில் அமர்ந்து மதத்தை அறுத்தவனாகவும் இளங்கோவடிகள் கோவலனைச் சுட்டுவார். இதன்வழி "ஒத்தறிவான் உயிர் வாழ்வான்" என்ற வள்ளுவநெறி கோவலனின் நெறியாக உள்ளமை புலனாகும் இப்பகுதி கோவலன் ஒரு மனிதநேயத்தன் என்பதைப் பறைசாற்றும் (Manickavasagam, 2019).

மேலும், "கடக்களிறு அடக்கிய கருணை மறவு" என்ற சொல்லாட்சிகள் உற்று நோக்குதற்குரியன, யானையை வெல்லும் மறவன் என்றளவில் நிறுத்தாமல் அவ்வாறு களிற்றை வென்றமைக்கு அவனுள்ளத்து சுரக்கும் கருணையே மூலமென்பதைக் குறிக்கக் "கருணை மறவ!" என உரைக்கின்றார் (Manickavasagam, 2019).

## கண்ணகியின் மனிதநேயம்

மாதரர் தொழதேத்தும் வயங்கிய பொருங்குணந்தவள் கண்ணகி தன் வாழ்வைப் பறித்துக்கொண்ட மாதவியைப் பழித்துரையாதவள் தன் கணவன் மொத்த செல்வத்தைக் தொலைத்தமைக்காக அவள் வருந்தவில்லை. ஆனால்

"அறவோர்க் களித்தலும் அந்தனர் ஓம்பலும்

துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்தமையே"

அவள் வருத்தத்திற்குக் காரணமாக அமைகிறது. இதன் வழி மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட இல்லறக் கடமையை ஆற்ற முடியவில்லையே எனவேதனை கொள்வது புலப்படுகிறது (Manickavasagam, 2019). எவ்வளவு செல்வமிருந்தும் தக்க நேரத்தில் அதை மற்றவருக்கும் கொடுத்து உதவ முடியவில்லையே என மானிடநேயமே கொண்ட கொழுநனிடமே அவளைக் கேள்விகேட்கத் துண்டியது. இதன்பின் தன் கணவனை இழந்த கண்ணகி நீதி தவறிய நெடுஞ்செழியனின் நாட்டை அழிக்கும் பாண்மையில் மதுரையைத் தீக்குரையாக்கின்றாள் ஆண்டும் நல்லோரைக் காத்து தீயோரை மட்டுமே அத்தீ சுட்டெரிக்க வேண்டும் என்றாள் கண்ணகி

"பார்ப்பா ஏறவோர் பசுப்பத் திணிப்பெண்டிர்

மூத்தோர் குழவி யெனமிவரைக் கைவிட்டு

தீத்திறத்தார் பக்கமே சேர்க"

என்ற கண்ணகியின் சூளுரையில் விஞ்சி நிற்பது மனிதநேயமே வேற்று நாட்டில் கணவனை இழந்து போக்கிடமற்ற அவலையாக உயிரை மாய்த்துக் கொள்ளும் மனநிலையில் இருந்தப் போதும் கூடப் பிற உயிர்களுக்குத் துன்பம் வந்துவிடக் கூடாது என்று கருதும் மனிதநேய மாண்பினலாகக் கண்ணகி விளங்குகின்றாள் (Manickavasagam, 2019).

மதுரை செல்லும் வழியில் கோவலன் கண்ணகியை உறையூர் முதுகாட்டில் பண்பற்ற இருவர் கேலி செய்தனர், அது கேட்ட கவுந்தி அவ்விருவரையும் முள்ளுடைக்காட்டில் முதுநரிகளாகத் திரியும்படிச் சபிக்கிறார். இதனைக் கண்ட கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளிடம்

“நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்

அறியாமை என்று அறியல் வேண்டும்”

என்று வேண்டித் துறவிக்கே மனித நேயத்தை புரிய வைத்த நேயமுடையவர்களாக விளங்குகின்றார் (Manickavasagam, 2019).

## மாதிரியின் அறம் மற்றும் முதற்காப்பியத்தின் பிற அறன்கள்

மதுரைக்கு செல்லும் போது புறசேர்யின் ஒரு மருங்கே இருந்த கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய இவரையும் காணுகின்றான் மாடல மறையோன். அவன் கோவலனை வணங்கி நிற்கிறான். ஆனால் இவர்கள் யாரும் உதவி கேளாமலேயே அவன் உதவ முற்படுகிறான். இதுவும் அறத்தின் வெளிப்பாடு ஆகும். மறுபுறம் மதுரையை அடைந்த தம்பதிகளுக்கு கவுந்தியடிகள் வேண்ட மாதிரி என்கிற இடையர்குலப் பெண் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து, அவர்கள் சில நாட்கள் இல்லறம் நடத்தத் தேவையான அனைத்தையும் கொடுத்து அறத்தை நிலை நாட்டுகிறாள் என்பதை அறியலாம். மன்னுயிர்களுக்கு எல்லாம் தம்மால் இயன்ற அறத்தை செய்ய வேண்டுமென்பதையே இளங்கோவடிகள் இங்ஙனம் எடுத்துரைக்கின்றார்.

## முடிவுரை

தமிழர்கள் வாழ்வின் இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்ற இறக்கத்தையும் நன்றாக அறிந்து வைத்திருந்தனர் பலவிதமான மன ஓட்டங்கள் கொண்ட மனிதர்களை ஒரு சமுதாயமாக இணைத்து வைக்க வேண்டுமென்றால் அறம் என்கிற மெல்லிய கயிற்றால் நான் ஒருங்கிணைக்க முடியும் என்றெண்ணிய சான்றோர்கள் இலக்கியங்கள் வாயிலாக அறத்தை கொண்டு செலுத்தினார்கள். அங்ஙனம் காப்பியத்தலைவன், காப்பியத்தலைவி வாயிலாக உரைத்தது மட்டுமல்லாம். பிற கதை மாந்தர்கள் வழியாகவும் அறக்கருத்தை எடுத்தரைக்கின்றனர். அறத்தால் மட்டுமே உலகயுர்கள் இப்புவிதனில் நிலைபெற்று இருக்கும் என்கிற சிந்தனை போற்றுதலுக்குரியது.

## References

Kathir Murugu, (2007) Naannari, Saratha Pathippagam, Chennai, India.

Manickavasagam, G. (2019) Silapathiagram, Uma Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License